# எனது இராகங்கள்..



வவுனியா - திலீபன்

# எனது இராகங்கள்

II

வவுனியா திலீபன்

வெளியீடு
வன்னி இலக்கிய கலாமன்றம்
வவுனியா.

எனது இராகங்கள்
வவுனியா - திலீபன்
(பதிப்புரிமை ஆசிரியருக்கே)

❋ வெளியீடு
வன்னி இலக்கிய கலா மன்றம்,
வவுனியா.

❋ அச்சுப் பதிப்பு
அபிராமி அச்சகம்
யாழ்ப்பாணம்.

❋ அட்டைப்பட ஓவியம்
தயா.

❋ முதற் பதிப்பு - ஜூன் - 1989

★ விலை 15/-

ENATHU RAHANGAL
(A Collection of Poems)
By Vavuniya Thileepan

● COPYRIGHTS RESERVED

□ PUBLISHED BY
VANNI ILLAKKIYA KALA MANTRAM,
VAVUNIYA.

□ PRINTED AT
ABRAMI PRINTERS
JAFFNA.

□ JACKET DESIGNED BY
THAYA.

● FIRST EDITION - JUNE - 1989
● PRICE : RS 15/-

# வெளியீட்டுரை

சிலரது கவிதைகளில் துன்பம் சித்தரிக்கப்பட்டு இருக்கும். பலரது கவிதைகளில் இன்பம் சிருஷ்டிக்கப்பட்டு இருக்கும். இந்த வகையான கவிதைகளை நான் ஒரு ஒற்றையடிப் பாதையாகவே கருதுகிறேன்.

ஆனல் - வவுனியா திலீப்பனின் கவிதைகளை பெரும் நெடுஞ்சாலைகள் என்று குறிப்பிட விரும்புகிறேன். இவரது கவிதைகளில் ஒன்றை ஆழ்ந்து வாசித்துப்பார்க்கும் போது, வாழ்க்கையின் நிஜம்தெரிகிறது; பிரச்சினைகளின்மையம் புலப்படுகிறது.

பிரச்சினைகளினல் பலர் பிய்ந்து போய்விடுகிருர்கள்: ஆனல் - இந்த இளைய கவிஞரோ பிரச்சினைகளுக்கு மேல் ஆசனம் அமைத்து, அதன்மீது அமர்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிருர்.

அவர் தனது பாதிப்புகளை வாசகர்களுக்கு பந்தி வைத்திருக்கிருர்.

இந்தக் கவிஞரின் தோளில் ஈழத்து மேகங்கள் மட்டுமல்ல; உலகத்து மேகங்களே பூத்தூவும்என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

இவரது புத்தகத்தை வெளியிட்டு வைப்பதில் எமது கலை இலக்கிய மன்றம் பெருமை கொள்கிறது.

**பொன். பார்த்தீபன்.**
செயலாளர், வ. இ. கலாமன்றம், வவுனியா.

---


## நன்றி

- வன்னி இலக்கிய கலாமன்றம்
- பொன். பார்த்தீபன்
- செம்பியன்செல்வன்
- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
- ஓவியர் - தயா
- அபிராமி அச்சகத்தினர், ஊழியர்கள்.

இத்தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளைப் பிரசுரித்து உதவிய பத்திரிகைகள்.. சஞ்சிகைகள்..

# சமர்ப்பணம்

வளம்மிக்க
வன்னி மண்ணில்
புதுமைப்
புகைப்படக் கலைஞனாக
மிளிர்ந்து-
இப்பூமி மீது
என்னைப்
பூவாகப் போட்டுவிட்டு-
பத்துக் கோடைகளுக்கு
முன்
தன் நாற்பதாவது வசந்தத்தில்
மாரடைப்பு என்னும்
திடீர் மரணத்தினால்
சொர்க்க சிம்மாசனத்தைத்
தேடிச் சென்ற-
என் தந்தை
'சோமரெத்தினம்' என்னும்
தங்க மேகத்திற்கு
இந்நூலைச்
சமர்ப்பணம் செய்கிறேன்......!

வவுனியா - திலீபன்

# இது ஒரு சந்தோஷ விபத்து

எங்கோ தொலைவில் உள்ள கூடொன்றில் வசித்துக் கொண்டு தன் உதடுகள் என்னும் இரு வயல்களுக்குள் மௌனத்தை நாற்று நட்டு வைத்த வண்ணம்– இனிப்பு ஏகாந்த வேளைகளில் என் மனசுக்குள் ஞாபகப் பாதமெடுத்து நுழைந்து- தன் பூ முகம் அசைத்து, 'நீ எழுது ... எழுது... எழுது...' என அன்பு நிர்ப்பந்தம் செய்கிறது ஒரு குயில்...

அந்தக் கூவ விரும்பாத குயிலின் மௌனத்தைச் சுமக்கமுடியாமல் – நான் உங்கள் முன் வார்த்தைகளாகிக் கொண்டிருக்கிறேன்.

என் வார்த்தைகளின் வதனங்களில் நீங்கள் புன்னகைகளையும், கண்ணீர்த் துளிகளையும் சந்திக்கலாம்.

நான் பேனாபிடித்தேனா? அல்லது பேனா என்னைப் பிடித்ததா? என்னும் வினாக்களுக்கு என்னால் இதுவரை சரியான பதில் சிந்த முடியவில்லை. ஆனால் இவ்விரு கேள்விகளுக்குள்ளும் நான் சிறைபட்டுக் கிடப்பது எனக்குச் சுகம் தருகிறது.

நான் கவிஞனாக வேண்டும் என்கிற காரணத்தினால் பேனா பிடித்தவனல்லன்; சில கவிதைகள் எழுதி விட்டேன். அதனால் நான் 'கவிஞன்' என்று பேசப்படுகிறேன்.

இது ஒரு சந்தோஷ விபத்து...

நான் பிறக்கவில்லை; உருவாக்கப்பட்டிருக்கிறேன். அதாவது காலம் என்கிற உளி இந்தப் பாறையைச்செதுக்கி சிலையாக்கி விட்டது.

ஓ! காலத்தின் கைகளுக்கு எவ்வளவு வலிமை...

பிஞ்சு வயதிலேயே நான் பிரச்சினைகளுக்குள் விழுந்து விட்டேன்; அதனால்தான் என் பிம்பம் பிரதி பலிப்பது சாத்தியமாகியிருக்கிறது.

ஓ! இது ஒரு சந்தோஷ விபத்து...

ஓர் இளம்பெண்ணின் முதல் பிரசவத்தைப் போல்- மிக மிக வேதனைப் பட்டுத்தான் இப்புத்தகத்தை நான் படைத்திருக்கிறேன். கர்ப்பப்பையிலிருந்து கஷ்டப்பட்டு உதிர்ந்த, குழந்தை கண்மலர்ந்து பார்க்கும் போது தயானவளுக்கு தான் பட்ட வேதனைகளெல்லாம், சாதனைகள் போல் தோன்றுமல்லவா? அதே உணர்ச்சிதான் இப் புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கும் போது எனக்குள் எழும்.

இப்போது இந்தப் பூவிற்கு தேனைமட்டுமல்ல, தீயைச் சுமக்கிற பக்குவமும் வந்துவிட்டது.

நான் பெருமைப் படத்தான் வேண்டும்; வாழ்க்கைப் போராட்டமும்- அதாவது தனிமனிதப் போராட்டமும் தேசப் போராட்டமும் கைகுலுக்கிக் கொள்கிற ஒரு கால கட்டத்தில் இலக்கியம் படைக்க நான் எழுந்திருக்கிறேன் அல்லவா?

எனது இராகங்கள்......

இது எனது முதல் புத்தகக்குழந்தை; இது அடம்பிடிக்கிறதா? அல்லது அணைக்கிறதா என்பதை நீங்கள் தான் கூற வேண்டும்.

பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த கவிதைகளை புத்தகத்தில் மொத்தமாக்கி உங்கள் விழிவிளக்குகளுக்கு கீழ் போட்டு வைத்திருக்கிறேன்.

நான் எழுதத் தொடங்கிய ஆரம்ப காலத்தில்- எனக்கு உற்சாகமும் என் எழுத்துக்கள் பிரசுரமாக வாய்ப்பும் தந்த ஈழத்தின் பிரபல்யமான எழுத்தாளர்கள் திரு. செம்பியன் செல்வன் அவர்களையும், திரு . செங்கை ஆழியான் அவர்களையும் என் உயிர் மலர் உதிரும் வரை மறக்க முடியாது.

இங்கே நான் நனைந்ததைப் பிழிந்திருக்கிறேன்; பருகிப் பாருங்கள்

பருகிய போதையில் குறைகளைப் பொத்தி வைத்து விடாதீர்கள். சுட்டிக் காட்டுங்கள். என் இருதயதிற்குமட்டுமல்ல; என்மேனியில் பொருந்தியுள்ள அத்தனை அங்கங்களுக்கும் உங்கள் விமர்சனங்கள் விழிப்பு ஏற்படுத்தலாம்.

அன்புடன்

**வவுனியா - திலீபன்**

மருக்காரம்பளை

வவுனியா.

1989 - 05 - 24

# பல்லவி

'கவிஞனும் சட்டத்தை மீறுவான்; கயவனும் மீறுவான்; பிரபுவும் மீறுவான்; பிஷாண்டியும் மீறுவான்; அதிகாரியும் மீறுவான். ஆனல் சட்டத்திற்குப் பயந்து நடுங்குபவர்கள் நடுத்தரவர்க்கத்தினரே!' - என்று ஒரு முறை சமூகத்தை விமர்சித்தான் நோபல் பரிசுக் கவிஞன பாப்லோ நெருடா.
ஆனல்,

நமது நாட்டில் கவிஞர்கள் அனைவருமே நடுத்தரவர்க்கத்தினராகவல்லவா காணப்படுகிறார்கள்?
ஏனிந்த முரண்பாடு?

மூன்றாவது அகிலத்தில் மத்திய தரவர்க்கம்தான்பாதிக்கப்படும் படித்தவர்க்கமாக விளங்குவதால் இருக்கலாமோ?

கல்வியும் - காளைவயதும் கனன்று கொண்டிருக்கும் புது இரத்தமும் சமூகச் சீர்கேடுகளின் மீதுகொள்ளும் சத்திய ஆவேசங்கள்-

அகரத்தின் அக்கினிப் பொறிகளாக கவிதைகளாகின்றன.

கவிதைகள் இலக்கண யாப்பு மரபுகளுக்குள் முடங்கிக்கிடந்த காலச் சிறையின் பூட்டுக்கள் பிறழ்ந்துவிட்டன. புதிய புதிய வார்த்தைச் சிறகுகளைக் கட்டிக் கொண்டு கவிதைகள் நடம் புரியத் தொடங்கிவிட்டன.

நான்காவது பரிமாணம் கலைகள் எல்லாவற்றிலும் தானகவே வந்து கலந்துவிட்டது.
காலமும் இடமும்-

வவுனியா திலீபனின் கவிதைகள் நன்கு புரியப்பட வேண்டுமென்றால் அக்கவிதை பிறந்தகாலமும் இடமும் எமக்கு தெரிந்திருக்க வேண்டும்.

இந்தக் கவிதைகள் பலவற்றை ஏலவே, பத்திரிகைகளில் வெளி வந்த காலத்தில் பார்த்து அதிர்ந்து பரவசப்பட்டு நின்றமை நினைவில் நிற்கிறது.

'என் ஊரில் நானே அந்நியன்' என்றகவிதை யதார்த்த பூர்வமான, உணர்ச்சிப் பிழியல். கவிஞனின் சொந்த அனுபவம்.

பாதைகள் இல்லை.
பயணிகள் இல்லை
பஸ் நிலையம் மட்டும்
விஸ்தரிக்கப்பட்டு விட்டதாம்.

இக்கவிஞன் போராட்டங்களையும், காதலுணர்வுகளையும் நிறையவே பாடியுள்ளான். சில கவிதைகள் 'கவிப்பொருளை' நேராகப் பாட, சில உருவ அமைவில் உறக்கம் கொள்ளுகின்றன. இத்தகைய முயற்சிகள் கவிஞனை முன்னணிக்கு நகர்த்துகின்றன.

காதல் - அதுவும் இளங்கன்றின் (CALFS LOVE) - எவ்வளவு தூய்மையானது. உயிர்த்துவமானது.

நான்
விழித்திருக்கும் போதே
நீ ஏன்
கனுக் காண வைக்கிறாய்?
- எந்த இளைஞன் இப்படி கனுக் காணவில்லை?

இக் கவிஞர் தான் வாழும் சமுதாயத்திலிருந்து கருப்பொருள்களை வாங்கிக் கொண்டாலும், அவற்றிற்கு உயிர்கொடுக்கும் வேளையில் தென்னகக் கவிஞர்களான நா. காமராசன், மு. மேத்தா வைரமுத்து போன்றோரின் பாதிப்பிலிருந்து விடுபட முடியாதவாறு தவிப்பதும் புலனுகின்றது. ஆரம்பங்கள் எப்போதும் இப்படித்தான்.

வவுனியா திலீபன் நல்லதொரு கவிஞனுக மலர்வதற்கான அறிகுறியை இந்த இராகங்கள் மீட்டிக் கொண்டிருக்கின்றன.

**செம்பியன் செல்வன்**
*1989. 05. 20*

# நான் என்னைத் தொலைத்து விட்டேன்

நான்
உன்னைத் தேடிச்சென்ற
வழியில்
என்னைத் தொலைத்துவிட்டு
வீடு திரும்பியிருக்கிறேன் !

⁂

நீ யார்
என
அறியும் நோக்கோடு
போனேன்...
இன்று
என் நண்பர்
என்னைப் பார்த்து
கேட்கிறார்
'நீ யார்?' என்று!

⁂

சொல்ல முடியுமா?
இப் புது
மனோ நிலையை
சொல்ல முடியுமா?

அது எப்படியம்மா
முடிகிறது?
ஒரு
பார்வையால்
என் பாதங்களைப்
பட படக்க வைக்க
எப்படியம்மா
உன்னால் முடிகிறது?

⁂

நான்
நம்பவில்லை.
நீ
மீண்டும்
என்னை
மீட்டுவாய் என்று
நான்
நம்பவில்லை...!
ஆனால்—
நான்
உன் நினைவு நரம்புகளை
மீட்டுவதை
நீ
நம்ப மாட்டாயா?

⁂

நாட்கள்
நகர்ந்து விட்டன.
நான்
என்னை மிதித்தபடி
நடந்து கொண்டிருக்கிறேன்!

உனக்கு
கடிதமெழுதும்
அவசரத்தில்
நான் இப்போது
கண்ணீரை அல்லவா
எழுதிக் கொள்கிறேன்!

❋
❋

வாழ்க்கை
சிலரை
வார்த்து வைக்கிறது.
பலரை
வாட்டி வைக்கிறது.
ஆனால்—
என்னை அது
காத்திருக்க வைத்திருக்கிறது!

❋
❋

உன்
உதடுகளை நோக்கியே
இப் பக்தனின்
பார்வைகள்!
நீ
சிந்தாமல் போனால்
நான்
சிதைந்து போவேன்......
ஆனால்—என்
சிதைவுகள் கூட
ஒரு
சிருஷ்டிப்பையே
சிந்திக்கும்...
என்
சிதையில் கூட
கற்பனை
பூக்கும்—

❋
❋

என் கண்ணே......
உன்னை
நான்
மனசுக்குள்
முடிந்து வைத்திருக்கிறேன்.
நீ ஏன்
முடிவு சொல்லாமல்
உன்னையே
உனக்குள்
மூடிவைத்திருக்கிறாய்?

❋
❋

வா வெளியே!
கண்ணீரில்
கனவுகள்
நனைவதற்கு முன்
நாம்
பனி நீரை சேகரித்து
நம் ஈரக்கனவுகளை
பத்திரப்படுத்தி வைப்போம்! ●

# மோகனமும் ஒப்பாரியும்...

இதோ—
ராஜ சபையில்
மோகனம்
தேசமெங்கும்
ஒப்பாரி...!

மக்கள்
சுமக்கும் பிச்சாபாத்திரம்
பசித்த வயிறோடு
புரண்டு படுக்கிறது!

காற்றின்
ஜாதிகள் எல்லாம்
இங்கே
அமுதமழையை
இறக்குமதி
செய்கின்றனவாம்...
அந்நிய மேகம் கூட
அமில மழை பொழிவதை
அறியவில்லையா?

திட்டங்களும்
சட்டங்களும்
மக்களுக்காகத் தானும்.
நம்புவோம்!
இதோ—

ஒருகை இழந்த
நிலையில்
மறு கையும் மறைந்து விடுமென
அதை
ஒளித்து வைத்திருக்கும்
என் தோழன்...!

போன வருஷம்
புதைக்கப்பட்ட
புருஷனுக்காக
புலம்பித் திரியும்
என் தோழி...!

கொட்டிய ரத்தம்
போதுமென
கும்பிடு போடும்
குமரி...

வலை வீசி
கவலையை
கைது செய்யும்
கடல் மலர்கள்...

விதை தூவி
துக்கத்தை
அறுத்துச் சுமக்கும்
விவசாயி...

மார்புக் காம்புகளை
திருகும்
குழந்தைக்கு
தண்ணீர்ப் பானம் பருக்கும்
தாய்.....

அரிசிக்குப்
பதிலாக
குறுணை அவித்துத்
தின்னும்
குடும்பங்கள்...

மண்ணெய்
இல்லை...
சூரியன்
கடலுக்குள் தற்கொலை
செய்வதற்கு முன்
வீட்டுப் பாடம்
படிக்க எழும்
மாணவன்...

இதோ—
ராஜ சபையில்
மோகனம்...
தேசமெங்கும்
ஒப்பாரி......!



# நிர்வாணங்களே ஆடைகளாகட்டும்

திசைகளின்
தேசமெங்கும்
இருட்டின் ஆதிக்கம்!

விடிந்தால்
புத்தாண்டின்
புது ஜனனம்..

ராத்திரி
மின்சாரமில்லை
என் மேசையில்
என்னைப் போல் அழுதவண்ணம்
மெழுகுவர்த்தி...

தீயின் அராஜகத்தால்—
மெழுகு
கரைகிறது
திரியோ
கருகுகிறது!

நாளை
புவியாள வரப்போகும்
புதியவனை
எண்ணிய போது
நித்திரையோ
கண்களை முட்டவில்லை.

இது—
மௌனத்தின்
பள்ளத்தில்
வார்த்தைகளின்
கொந்தளிப்பு......

ஒரு சேவலின் கூவல்
தூரத்தில் எழுந்து தேய்ந்தது
மெல்லிய காற்று

இலைகளின் மீது
நடந்து போனது...
கீழ் வானம்
கத்தியினால் காயப்பட்டதைபோல்
சிவப்புக் கோலம் காட்டிற்று!

இலைகளின்
ஈரப் பிரதேசமெங்கும்
வெளிச்ச மழை .....

புது வருஷத்தின்
ஸ்பர்ஸம் கிட்டியதால்
வைகறைப் பூக்கள்
பிரபஞ்சத்தின் மேனியில்
புது ஆடை போட்டன!

நான் எழுதினேன்
என்
இருதயத்தின் வயிறு
நிறையும் வரை
எழுதினேன்.

விடிந்து விட்டால்
வெளிச்சம்—என்னை
விசாரித்துவிடலாம் என்பதற்காக
அவசரப்பட்டு எழுதினேன்...

தென்றல்பட்டு
சேதப்பட்டு போகிறது
சின்னச் சின்னப்
பூக்களெல்லாம்
ஒரு புயலை எதிர்த்து
போர்க்களத்தில்......

இந்த—
ரத்தக்களத்தின் மத்தியில்

ஒரு
சிவப்புச் சூரியன்
புது வருஷமே
நீ- வசந்தமாகிவிடு...

இந்த
தேச சகாராவில்

ஒரு
நயாகராவாகி விடு .....
எமது
நிர்வாணங்களே
எமக்கு
ஆடைகளாகட்டும்!

கட்டுக்குள்
சிக்குப்படாத
காற்றினைப்போல்
நாம்
சுற்றித்திரியவேண்டும்!

1987ஆம் ஆண்டு பிறக்கப்போவதை நினைத்துப் புனையப்பட்ட கவிதை.

⁂

## எமது பெண்கள்

உதடுகளில்
புன்னகை......
இதயங்களுக்குள்
காயம்!

## பத்திரிகையாளன்

நெருப்புக்குள்
நீந்துகிறான்......
நந்தவனம் தேடி!

## வாலிபம்

முதலில் சப்தத்தை
தேடும் —
முடிவில் அர்த்தத்தை
நாடும்!

## காதல்

பார்வைகள்
பல்லவி ...
புன்னகைகள்
அனுபல்லவி ...
கண்ணீர்
சரணம் ...!

## தொழிலாளி

முதலை
முதலாளிகள்
முகவரி எழுத —
தன்
ரத்தத்தால் கட்டுகிறான்
மாளிகை......!

⁂

# மன்னவனே முளைத்துவிடு...

நீ சொன்னாய்
நான்
நிலவின் இனம் என
நிஜம்...... நிஜம்......
நானும்
களங்கப்பட்டவள்தானே!

✻

என்
கண்ணீர்த் துளிகளை
கயிறு போட்டுக் கட்டி
என்னுடனேயே வைத்திருக்கி
றேன்.
ஏனெனில்
அவை
உன் ஆவியை
அசுத்தப்படுத்தக்கூடாது.

✻

உன்
எழுத்துப் பூக்களை
நான்
ஊன்றிக் கூட
முத்தமிட்டதில்லை.
ஏனெனில்,
அவை
என்
உதட்டு உஷ்ணத்தால்
எரிந்து விடக்கூடாது.

✻

கவிதை தெளித்து
என்
கன்னங்களின் மேல்
உப்பு முத்துக்களை
பொறித்தவனே
உறங்கியா போனாய்?

✻

என்
கண்ணீர்த் துளிகளின்
தொகையை
கணக்கெடுக்கப் போகிறாயா?
வா, என்
தலையணையைப் பிழிந்து
காட்டுகிறேன்!

✻

மரித்துவிட்ட
மன்னவனே-
மறுபடியும்
நீ முளைத்துவிடு
மங்கை
எனக்கு மகிழ்ச்சிகொடு!

# சூரியனுக்கு ஒரு விண்ணப்பம்

தைமா தாவின்
கருப்பையில்
ஜனிக்கப் போகும் சூரியனே-
நாங்கள் தாமரைகள் தாம்......
ஆனுல், புன்னகைக்க மாட்
டோம்!

உன் ஒளி கண்டு
புன்னகைப்பதற்கு
முடியாமலுள்ளோம்.

உன் பொன்னுதயம்
புஷ்பிக்கும் வேளை
இங்கு—

பல இதயங்கள்
பாதையிலே விழலாம்!
உன் விழி பூத்தவுடன்
அட்டூழியத்தையா
தரிசிக்க வேண்டும்?

நாங்கள்
நிர்வாணமாகி நிற்கிருேம்!
நீ வந்து
எந்த ஆடையை உலர்த்தப்
போகிருய்?
எமது உடலிலிருந்து வடிந்த
குருதியைக் காயவைக்க
உன்ஞல் முடியும்.

ஆனுல்—
உனது
உடலில் குருதிவடிந்தால்
அதை
யாரால் காயவைக்கமுடியும்?
நாங்கள் பொங்குவோம்
அது—
எமது கலாசாரம்.
எமது பொங்கல் கண்டு

நீ—
ஏமாந்து விடாதே!
நாம்—
வைகறையில்
துயில் எழுவதில்லை.
நெருப்புப் பூமியில் தான்!
எங்கள் செவிகளுள்
பூபாளமாய்ப் பொங்குவது-
வேட்டுச் சப்தங்களே
எமது
வெளிச்ச விளக்கு
எப்போதோ விலையாகி
விட்டது
இப்போது—
இருட்டுக்குள் ஒளிந்து வசிக்
கிருேம்!

நீ வந்து
எங்கள்
உறைவிடத்தின்
முகவரியை
விளம்பரப் படுத்திவிடாதே!

*1986 தைப்பொங்கல் தினத்தை*
*நினைவுகூர்ந்து எழுதப்பட்டது*

—வவுனியா இலீபன்

# போய்விடு பெண்ணே.. போய்விடு !

அவளொரு கிராமத்துத் தென்றல்! படிப்பதற்காய் நகரத்திற்கு வருகிருள்.

பதினெட்டு வயதுப் ப்ருவ வாலிபனொருவன், அந்தப் பதினறு வயதுப் பாவையினை தன் கண்ணெனும் கமராவினுல் படமெடுக்கிருன்.

ஆம்; அந்த இரு இளையகுயிகள் மத்தியில் ஓர் இனிப்புச் சந்திப்பு இடம் பெற்றுவிட்டது.

அவளைத் தனது இதயத்துள் பதியம் போட்டுவிட்டான் அவன்; ஆனுல்—அவளோ, அவனைத் தனக்குள் தங்க வைப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுக்காதவள் போலதிரிந்தாள்.

நாட்கள் மாதங்களாக ஒழுகிக் கொண்டிருக்கின்றன.

அவள் தாமரை உதடுகள் அவனுக்குச் சாதகமான' அல்லது பாதகமான பதில்கள் எதையும் உச்சரிக்கவில்லை.

ஆனுல்— கண்களால் மட்டும் அவனைக் கவனித்துக் காயப்படுத்திச் செல்வாள்.

ஒருமாலைப் பொழுது!

நகரத்து வீதிகளில் அவனுக்குக் கற்பனைகளையும், கனவுகளையும் பரிசளித்துக் கொண்டிருந்த அந்தக் கிராமத்துக் கிளி, அவன் செவிகளுக்குள் எந்தவிதமான வார்த்தைத் துளிகளையும் சிந்தாமல் தன் சொந்த இருப்பிடமான கிராமத்தை நோக்கிக் கிளம்பி விட்டது.

அவள் போன பிறகுதான், தான் நேசித்து வந்த — வரும் மேகம் பொழியாமல் போய்விட்டதை, அந்த ஆண் மயில் புரிந்தது.

கண்களில் கண்ணீர் கசிய,

'இனி எப்போது எனது செடி இந்த நகரந்துச் சாலையில் பூக்கப் போகிறதோ......' என யோசித்து அவன் அழுதான்; அவன் தேகத்துக்குள் வசிக்கும் ரத்தமெல்லாம் கண்ணீராக நிறந்திரிந்து, வழிந்தோடியது.

காலவெள்ளம் ஐந்து வருஷங்களை அள்ளிக்கொண்டோடி விட்டது. அதே வெள்ளம் அவனை கயிறுகட்டி இழுத்துக்கொண்டு போய் கற்பனைப் பிரதேசத்துள் இறக்கிவிட்டது.

ஆம்;

இப்பூமியின் மேனியில் அவன் புதிய கவிஞனைகப் பூத்து விட்டான்!

ஒரு நாள்!

ஒரு கோயில் திருவிழாவில், அந்த மஞ்சள் மைனவை அவன் காணுகிறன்! அவள் தன் தோழிப்படைக்கு மத்தியில் சுதந்திரமாக சுவாசித்துக் கொண்டு, அவனைத் தன் விழியென்னும் அடிமட்டத்தால் அணுவணுவாக அளவெடுக்க ஆரம்பிக்கிருள்.

அவன் உடலில் உள்ள ஒவ்வொரு நரம்புகளுக்குள்ளும் புயல்வீசத் தொடங்குகிறது.

அந்த ஆண் இருதயம் வாய்க்கு வரத் துடிக்கும் வார்த்தைகளை தனக்குள் எழுத்துக் கூட்டி வாசிக்கத் தொடங்குகிறது!

## நீங்களும் வாசித்துப் பாருங்கள்

விழிகளுக்குள்
விதையாக
விழுந்தவளே......
எப்படி
மனசுக்குள்
நீ
பூக்கத் தொடங்கினய்?

வெள்ளைச்
சட்டை
படபடக்க
நீ
வீதியில் செல்வாயே ....
எப்போதம்மா
சேலைக்குள்
நீ
புதைந்தாய்?

நான்
தந்த கவி மலர்களை
வாங்காமல் நிராகரித்துவிட்டு
கனகாம்பரப் பூக்களை
ஏன்
கூந்தலில் சூடியிருக்கிறய்?

வற்றிப் போன
இந்த
ஐந்து வருஷங்கள்
உனக்கு இன்னும் வாழ்க்கையை
கற்றுத் தரவில்லையா?

நீ
கண்களால்
தந்த காயம்
உன்
வார்த்தை
மருந்தைத்
தேடிக் கொண்டிருக்கிறது.....

அந்தப்
பழைய காயத்தின் மீது
இன்று
ஏன்
புதுக்காயத்தை
உற்பத்தி செய்கிறாய்?

உன்
விழி வெளிச்சம்
என்
முகத்தில்
மொய்த்திரா விட்டால்
நான்
பொழிந்திருப்பேனா?
கண்ணீர் அல்ல;
கவிதை
பொழிந்திருப்பேனா?

உன்
பஞ்சுப் பாதங்கள்
அப் பாடசாலை வீதியில்
பதிந்திராவிட்டால்
நான்
முளைத்திருப்பேனா?
மனிதனாக அல்லன்;
கவிஞனாக
முளைத்திருப்பேனா?

ஏனடி
இன்னும்
மௌனம் சாதிக்கிறாய்?
ஓசையை
எத்தனை காலத்திற்கு
பூட்டி வைக்கப் போகிறாய்?

இதோ பார்!
என்
எழுத்துத் தேனைப் பருக
எத்தனை
மனித வண்டுகள் .. ...

என்
வாழ்க்கை வானில்
வலம் வர
இங்கே
எத்தனை
வாலிபப் பறவைகள்......

உன்
எண்ணங்களை
நீ
மௌனத்தால்
பொத்தி வைக்கலாம்.........
ஆனால்
உன்
விழிகளில் தெரிகிறதே
உன்
நேசத்தின் விலாசம்! .....

ஏய்... ஏய்...
என்ன
திடீரென்று
விழி இதழ்களில்

ஈரம்
உன்
பார்வைகளைப்
பார்க்கத்தானே
நான்
வந்தேன்......
ஏன்
கண்ணீரைக்
காட்டுகிறாய்?

அழாதே!
உனக்கும் சேர்த்துத்தானே
என்
ஒவ்வொரு அங்கங்களும்
கண்ணீர் கொட்டுகின்றன!

அழாதே!
உன்
விழி நீர்
விழுந்தால்
என்
எழுத்துக்களில்
ரத்தம் வரலாம்......

நீ
அழாதே!
உணர்ச்சிகள்
ஊஞ்சல் ஆடிய வேளையில்

நான்
உன்னைச் சந்தித்தேன்!
இப்போது
அறிவு
என்னை ஆக்கிரமித்து விட்டது!

உன்
எதிர் காலத்தை
நான்
சிதைப்பேன் என
நீ எண்ணாதே ....
அஞ்சாமல் போ!

எனது
குழந்தையும்
உனது
குழந்தையும்
பிறந்து வளர்ந்து
இந்த
அழுக்குச் சமுதாயத்தைச்
சுத்தப்படுத்தட்டும்.

நீ
அஞ்சாதே......
போ...

காதலுக்குக்
கல்லறை
கட்டி முடிக்கக்
கனவு காணும்
வர்க்கம்
எமது
இதயங்களை
பூஜிக்கத் தொடங்கட்டும்!

உனது
ஞாபகங்கள்
என்
மனசுள்
என்றும் வாசம்

வீசும்!
உனது
நினைவுகளில்
நீந்தி
நான் என்றும்
வசந்தத்தைச்
சுவாசிப்பேன்!

உன்
தோழிகள்
என்னை அடையாளம்
காண்பதற்கு முன்
நீ போய்விடு.
வீட்டுக்காரர்
உன்னை
வீட்டுக்குள் வைத்துப்
பூட்டி விடுவார்கள்......

அடுத்த தடவை சந்திக்கும்போது
இன்றைய கண்களால்
பார்த்துவிடு......
இரவு
மதுவை ருசித்துப்பருக வேண்டும்!

❀ ❀ ❀

## மனிதன்

பிறந்து
தவழும் போது
தெய்வம்...
எழுந்து
நடக்கும் போது
மிருகம்!

## துணிச்சல்

நீ
தொடர்ந்து
தூக்கிக் கொண்டே இருப்பா
யென்றால்
நான்
தொடர்ந்து
விழுந்து கொண்டே இருப்பேன்

✱ ✱ ✱

# பேனுவின் கண்ணில் கண்ணீர்..

பாரதி ...!
என்
பாசத்துக் குரிய
பாவலனே......!
உன்
பெயரை
எழுத எண்ணும் போதெல்லாம்
என் பேனு
கர்வப்பட்டுக் கொள்கிறது ...
ஆனுலும் — அதன்
கண்ணில்
கண்ணீர் கசிகிறது!

வறுமை நெருப்பில்
வாழ்ந்த
பூமரமே......
நான்
பெருமைப் படுகிறேன்.
நீ
சுவாசித்துவிட்டுச் சென்ற
நூற்ருண்டில்
நான்
சுவாசிப்பதை எண்ணி
நான்
பெருமைப் படுகிறேன்!

நான்
வெட்கப் படுகிறேன்.
உன்
மகத்துவத்தைப்
புரிந்து கொள்ளாமல்
உன்
விழிக் கிண்ணங்களுக்குள்
கண்ணீரை
ஊற்றி வைத்த
கிழட்டு உலகத்தை
எண்ணி
நான்
வெட்கப் படுகிறேன்!

பாரதி!
நீ
தேடிய தேசத்தை
நாம்
கனவுகளில் தாம்
கண்டு கொண்டிருக்கிருேம்.

வெள்ளை
வெறியர்களைத்
துரத்த
வெடித் தெழுந்தவனே—
இங்கே பார் ...
நாம்
கறுப்புக் கைகளினுல்
கட்டப்பட்டுக் கிடப்பதை!

உச்சி மீது வானிடிந்து
வீழ்ந்தாலும்
அச்ச மில்லையென்ருயே .. ..
இதோ பார்

நாம் பனம் பழம் வீழ்ந்த
சப்தம் கேட்டு
பதுங்கு குழிக்குள்
படுத்திருப்பதை .....

நீ
கண்டு பிடித்த
புதுமைப் பெண்ணை
நாம்
திரைப்படங்களில் மட்டுமே
பார்க்கிறோம்!

வாக்கினில்
இனிமை வேண்டும்
என்றாயே—
இங்கே பார்.....
நாம்
சடலம் என்ற வார்த்தையை
மட்டும்
உச்சரித்துக்கொள்வதை!

பாரதி!
உன்
பெயரை
எழுத எண்ணும் போதெல்லாம்
என் பேனா
கர்வப்பட்டுக் கொள்கிறது.
ஆனாலும் — அதன்
கண்ணில்
கண்ணீர்கசிகிறது!

அழுக்கினால்
ஆக்கிரமிக்கப்பட்டுள்ள
அகிலத்தை
அமுதமாக்கப் பாடினாயே—
இங்கே பார்.....
உனது
பாடல்களில் எல்லாம்
அழுக்குமொய்த்துக் கிடப்பதை!

நூறு
சூரியர்களுக்குரிய
வெளிச்சம்
உன்
எழுத்துக்களில்
பிரகாசிக்கிறது ...
இருந்தும்
நாம்
மின்மினிப் பூச்சிகளைத் தாம்
தேடுகிறோம்!

ஆயிரம்
ரோஜாக்களுக்குரிய
வாசம்
உன்
கவிதைகளில்
வீசுகிறது ....
இருந்தும்
நாம்
பிணங்களைத் தாம்
முகர்ந்து கொள்கிறோம்!

பாரதி!
நீ

உலகம் முழுவதும்
பற்றிய தீ!
நீ
மனிதனுய் வாழ்ந்து
கவிதை பாடியவன்......
மனிதனின்
காயங்களுக்கு
எழுத்து மருந்து
தூவியவன்!
நீ
தேசத்திலிருந்து
சிறை சென்ருய்!
இங்கு
தேசமே
சிறைச்சாலை

நீ
அன்று முறுக்கிய
மீசையின் சப்தம்
என் இருதயத்துள்
சரசரக்கிறது!

நீ
அன்று சிந்திய
வார்த்தைகளின் அர்த்தம்
என் செவிகளுக்குள்
படபடக்கின்றன!

இன்னும்
சிதையாமல் இருப்பின்
உன் சிறகுகளில்
ஒன்றைத் தா......

நான்
வானத்தை உரசி
வானவில்லைத்
தொட வேண்டும்!

முடியுமானுல்—
உன்
துணிச்சலில் கொஞ்சத்தை
எனக்குத் தா......
நான்
சுதந்திரம் என்கிற
சொல்லை
சுகமாக
உச்சரிக்க வேண்டும்!

முப்பத் தொன்பது
வயதில்
மரணத்தால்
முத்தமிடப்பட்டவனே......
உன்
பெயரை
எழுத எண்ணும் போதெல்லாம்
என் பேனு
கர்வப்பட்டுக் கொள்கிறது.
ஆனுலும்—அதன்
கண்ணில்
கண்ணீர் கசிகிறது!

தாங்க முடியவில்லை
பாரதி!
தாங்க முடியவில்லை.
நெஞ்சுக்குள்
நெருப்பெரிவதை
தாங்க முடியவில்லை!

❋ ❋ ❋



# இன்று விழா எடுப்போம்!

இன்று
சுதந்திர தினம்...
சிங்கக் கொடிமரத்தை
நட்டு வைப்போம்
அதனடியில்
படுத்துத் தூங்குவோம்!

இங்கே
நாற்று நட்டவன்
பட்டினி..
வீடு கட்டியவன்
அகதி...

ஆம்;
நாம்
மலரென எண்ணி
நெருப்புக்கல்லவா
மகுடம் சூட்டிவிட்டோம்!

மக்களே!
ஆத்திரத்தில் எழுந்து
தேசியக் கொடிக்கு
தீ-
வைத்து விடாதீர்கள்
அது
எமது
நிர்வாணங்களை
பொத்திவைக்க உதவலாம்.

சிறைக் கைதிகளே!
வானத்தின்
நிறத்தை
மறந்து விட்டீர்களா?
இதோ பாருங்கள்
தேசியக் கொடியை...

இந்த
முப்பத்தொன்பது
வருஷங்களின்விடிவில்-
எந்த
உதயம்
எம்மை
மலர்த்தி வைத்தது?

எந்தத்
தென்றல்
எமது இதய வீட்டுக்கு
விஜயம் செய்தது?

சுதந்திர நாடாம்
சொர்க்கமாம்
தேசியக் கொடியை
செய்பவனுக்குக் கூட
சிறகில்லை

வீட்டுச் சுவரில்
கலண்டர் மட்டுமே
புதிதாய்க் கிடக்கிறது.
நாம்
அன்றைய அழுக்குடனேயே
இருக்கின்றோம்...

ஓ!
நாம் சோம்பல்
முறிப்பதாக எண்ணிக்கொண்டு
கைகளை
முறித்துக் கொண்டோமா?

தமிழன்
மாபெரும்
சட்டத்தரணிதான்.
ஆம்;
சட்டங்களினால் பெற்ற
தாயகத்தை
தானம் செய்வதற்கு
தமிழன்
மா . மா...மாபெரும்
சட்டத்தரணிதான்
சீ ..
வெட்கம்... வெட்கம்...
ஆனாலும்
விழா எடுப்போம்
விமர்சையாகக் கொண்டாடு
வோம்!

1987 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி ஸ்ரீலங்காவின் முப்பத்தொன்பதாவது சுதந்திர தினத்தன்று பிரசுரிக்கப்பட்ட கவிதை.



# எனது இராகங்கள்

பளபளப்பான
ஒரு
நட்சத்திரம் போல
என்னருகில்
கிடக்கிறது.
ஒரு
கண்ணீர்த் துளி... !

இதை
எந்த மேகம்
சிந்தி விட்டுப் போனது?

அடடே!
என்
கண்களல்லவா
கசிந்திருக்கிறது!

அது
என்
அவஸ்தைகளின்
பாஷை......!

என்
சோகங்களின்
சுமை.... !

என்
காதலியின்
மௌனம்!

மலர்களை
மதிப்பதாக எண்ணிக் கொண்டு
என் கால்கள்
எத்தனை முட்களை
முத்தமிட்டிருக்கின்றன .. ...!

படிகள் என
நினைந்தபடி
நான்
எத்தனை பள்ளங்களில்
இடறி விழுந்திருக்கிறேன்.!

வாலிப வருஷங்களில்
சில
கண்ணீர்த் துளிகள்
என்னைச்
சிந்தியிருக்கின்றன......
'சிந்தி' என்றன!

கங்கையை நோக்கி
ஆரம்பமான-எனது
பயணம்
சஹாராவில்
முடிவடைந்திருக்கிறது!

மிக ஆவலாக
வீணை வாங்கப் போய்
விரல்களில்லாமல்
வந்திருக்கிறேன்.... !

இறகுகளுக்காக
ஏங்கி -
வானத்தை
இழந்திருக்கிறேன்!

இவையெல்லாம்
பாடமுடியாத
பாடல்கள் - ஆனலும்
பாடித் தீர வேண்டிய
இராகங்கள்......!

எனது இராகங்கள்
இனிப்புக் கலந்த
கண்ணீர்த் துளிகள்!

## கவிஞன்

இந்தப் பூவுக்குள்
ஏராளமான
புண்கள்...
பூமியைச் சுகப்படுத்த
இதழ்க் கைகளில்
மருந்து!

# பூஜிக்கிறவர் புதைக்கப்படுகிறார்!

மனிதர்களே —
உங்கள்
விழிக் கதவுகளை
திறந்து வையுங்கள்...

கொஞ்சம்
திறந்து வையுங்கள்

என்
பிரியத்திற்குரிய
வன்னிப் பிரதேசம்
வறண்டு தவிப்பதை
தரிசியுங்கள்...

அந்த
இனிப்பு மண்
எரிந்து கிடப்பதை

பாருங்கள்...
விழி விரித்துப்
பாருங்கள்...

என்
பிரதேசத்துக்கு
மேலே
வானம் உண்டா?
நம்ப முடியவில்லையே!

இவ்வருஷம்
ஏன்
மேகங்கள்
மலடுகளாயின...?

வசந்தம்
என்பதை
நான்
வார்த்தையில் தான்
காண்கிறேன்...

தென்றலுக்குப்
பாதை
செய்யப் படவில்லையா?

இந்த
வடக்கின்
எல்லை வேலி
உடைக்கப்படுகிறதே!

இங்கே
கல்வி கூட
கற்பழிக்கப் படுகிறதே!
புறக்கணிக்க
வேண்டியது

நரகத்தைத்தான்
இந்த சொர்க்கத்தையுமா?
மனிதர்களே
உங்கள்
விழிக் கதவுகளை
திறந்து வையுங்கள்...
கொஞ்சம்
திறந்து வையுங்கள்...

நாம்
மனிதர் என்பதை
கொஞ்சம்
மனிதாபிமானத்தோடு
தரிசியுங்கள்!

எத்தனை
பூக்களை
நாம்
பூத்திருப்போம்...

அத்தனை
பூக்களும்
ஆள்பவனுக்கு
மட்டும் தானு?

இங்கே
உலகம் தெரிந்த
மனிதர்
மிகக் குறைவு
ஆனுல் -
அத்தனை பேருக்கும்
மனசு தெரியும்...

மனிதர்களை
பிடிக்கும்!
உலகமே
எனது
இளைய நிலத்தை
நேசி...

எல்லோரையும்
பூஜிக்கத்
தெரிந்தவர்கள்...
எல்லோராலும்
புதைக்கப் படுகிறுர்கள்!

பாதிக்கப்பட்ட
பகுதிகளை
புனரமைக்கும் முன்னர்
பாதிக்கப்பட்ட
எனது தேசத்து
மனிதர்களை
புனரமையுங்கள்!

மனிதர்களே...!
உலகத்து
மனிதர்களே...
உங்கள்
விழிக் கதவுகளை
திறந்து வையுங்கள்!

எமது
கண்களைப் பொத்தும்
கண்ணீரை
கவனியுங்கள்! ★

# வெற்றி... வெற்றி...

தவழ்ந்தோம்
நடக்கிறோம்—
பறக்கப் போகிறோம்...
ஆம்—
அடிக்க அடிக்க
நாம் தேயவில்லை; வளர்ந்தோம்!

அலை
கரையை முட்டும் போது
நுரை ஜனிக்கிறது.
நாங்கள்
மிதிக்கப்பட்டதனால்தான்
புரட்சி வெடித்தது!

அன்று—
பறக்க முடியாமல்
சிறகற்று
சிறைக்குள் சிக்குப்பட்டிருந்தோம்

இன்று—
சிறையை உடைத்து
விட்டோம்
மனமெங்கும்
சிறகுகளின் குருத்துக்கள்!

அலையே ஆனந்தம் மென
அதன் மேல் நீந்தினால்
அடியினில் பளிச்சிடும்
முத்தினை அள்ள முடியுமா?

விரலை
துப்பாக்கியாகக் காட்டிய காலம்
விரைந்து விட்டது
விரல்களின் மேல்
முளைத்து விட்டன
துப்பாக்கிகள்...

இறந்த காலம்
நஷ்டம் காட்டவில்லை
தோல்வித் தூசு
எங்கள்
தோள்களிற் கூட
ஒட்டவில்லை!

சூறுவளியால்
மரம் சரியும் வேளை
ஆணி வேர் மௌனம்
பக்க வேர் தான்
மரத்தை விழ விடாமல்
நிறுத்தி வைத்திருக்கிறது!

இலை விழுந்த நேரம்
எழுந்திருந்தால்
நிச்சயம்
கிளையை காப்பாற்றியிருப்போம்
போகட்டும்......
நல்ல சகுனம்
எமது பயணம்.
அடிமரத்திற்கு அழிவில்லை!

பூமி மீது
பூத்து விழுந்த
விழி நீர் விழுதுகள் தான்
வாழ்க்கை விருட்சத்தை
தூக்கி வைத்திருக்கின்றன!

இனி
பாடையில் ஏற்றி விட்ட
ஆடையை அபகரிக்க
எவராலும் முடியாது!

நிஜ நிலவு
நிலத்தில் முகங்காட்டுமா?
வானத்தில் தானே—
அதனுற்ருன்
நாம்குனியாமல்
அண்ணுந்தே இருக்கிருேம்!

ஈழப் பூவின் முக்கிய இதழ்கள்
நம் கைவசம்......
இனியென்ன தயக்கம்?
மீதி இதழ்களையும் பறித்து
முழுப் பூவை
முத்தமிடுவோம்!

விழி வானத்தில்
விடியல் சூரியன் உதிக்கட்டும்–
நெஞ்ச வீணை
வெற்றி ராகம் சிந்தட்டும்!

★ ● ★

## சுதந்திரம்

தாராளமாக
வாய்களைப் பயன்படுத்தலாம்;
சாப்பிடுவதற்கு மட்டும்!

# தீ... தீ... தீ....

'பெண்ணே!
நீ
தெய்வமா?'
இல்லையில்லை
தீ!
இப்படி
உனக்கு
நீயே
பெயர் சூட்டிக்கொள்...

மிதிக்க
முனையும்
ஆண் கோழைகளை
நசித்துவிடு
தேன்
வார்த்தைகள்
சிந்தி,
தீண்டி ருசிகாணும்
தீயவர்களை
எரித்துவிடு!

நீ
மண்ணைப் பார்க்காதே.......
விண்ணைப் பார்.. ...
அடடா...
பறவைகள்
எவ்வளவு ஆனந்தம்கொண்டு
பறக்கின்றன!

★

சமையல் அறையிலும்
சயன அறையிலும்
உன்
வாழ்க்கை
முடங்கி விட்டதே!

அடிமைச்
சங்கிலியை
அறுத்தெறி!

உன்
தேகம்
கட்டியணைப்பதற்குப்
பயன்பட்ட காலம்
கரைந்து போகட்டும்;
அது
இனி
வெட்டி வீழ்த்த எழட்டும்!

கூந்தலில்
உள்ள பூவை
உதிர்த்து விடு
மகுடம்
உன் கூந்தலை
வரவேற்கிறது!
இனியாரும்
உன் முகவரி கேட்டால்
'தீ' என்று சுட்டுவிடு!

★

# தற்காலிக இடை நிறுத்தம்

எங்கள்
சீதைகளுக்கு
பிறந்த இடமே
அசோகவனம்!

வரதட்சணை
தீ பற்றியதால்
ராஜ விளக்குகள்
வீதி விளக்குகளாயின!

வானத்தின் வண்ணத்தினை
ரசிப்பதற்கு முன்பே
சிட்டுக்களின்
சிறகுகள் வெட்டப்பட்டுவிட்டன!

அவர்கள்
வார்த்தைகள் - பூக்கள்
வாழ்வினை ஆராய்ந்தால்
ஆங்காங்கே முட்கள்!

நெஞ்சினில் தகிக்கும்
நெருப்பினால் பல அடுப்புகள்
தீ மூட்டப் படுகின்றன!

வழிகின்ற வருஷங்கள்
பாலைவனங்கள்...
கண்கள்
மண்டைக்குள் புதைகின்றன!
பற்கள்
உதடுகளின் மேல் முளைக்கின்றன!

❋

அவர்கள்
நிழல்களின்
அதிகமான பாகம்
கண்ணீரில் தான் நனைகின்றது!

'வில்லை முறிப்பவர்க்குத்தான்
பெண்'
சட்டமொன்று அமுலாகவேண்டும்
ஏராளமான
ஆண் ராமர்கள்
சந்யாசியாகி விடுவார்கள்!

வீதியில்
வெள்ளையாய்
பல்லைக் காட்டுவான்
தொட்டு விட்டுத்தான்
பொருளாதார நெருக்கடியை
புலம்புவான்!

பேனாக்காரர்களே...
பூவையரை
பூவென கிறுக்கி வைக்காதீர்கள்
வாளென வார்த்து வையுங்கள்
இது ஒரு தற்காலிக
இடை நிறுத்தம்.
ஆம்;
வெட்டு வாங்க வேண்டியவர்கள்
வெட்டுப் படும் வரை!

❋



# மொட்டுக்கள் முறிய வேண்டுமா?

மு. மேத்தாவின்
சினத்தைக் கண்டேன்
சிந்தித்தேன்
சிந்தையில் கனப்பதை
சிந்துகிறேன்.

யாப்பிலக்கணத்தில்
மூழ்கி விட்ட
மாமேதைகள்
மௌனம்!

எங்கள்
வீதியில் ஓர் வேலி...
எங்கள்
சபையில் ஓர் ஊளைச் சப்தம்...

பிடுங்க வேண்டியது
ஆணி வேரை
இலையை கிள்ளியெறிந்தால்
மரம் செத்து விடுமா?

முதலுக்கு நஷ்டமாம்
முனகுகிறார்
மு. மேத்தா—
அன்று அவர் ஆசைக்கு
யார் முட்டுக் கட்டை
நட்டது?

அரும்புகள்
அவிழ்ந்த பின்னர் தான்
வாசத்தை வீசும்.
மலர்வதற்கு முன்பே
மொட்டுக்கள்
முறிந்து விழ வேண்டுமா?

ஓ!
இலையைப்
பூக்கள் மூடிவிடுமெனும்
எரிச்சலா?
எந்தக் குருவியும்
பொரித்தவுடன்

வவுனியா- **திலீபன்**

பறந்த தில்லை.
ஜனித்தவுடன்
ஞானம் பெற
தாங்களென்ன
ஞான சம்பந்தரா?

கால நீதிபதியின்
புன் சிரிப்பைக் கண்டுதான்
புதுக் கவிஞர்கள்
பொழிகிறுர்கள்.
இது
யார் குற்றம்?

எல்லா
நகரங்களும்
கிராமங்களின்
புதிய
பரிணமம் தான்!

ஒட்டக் கூத்தரின்
வாரிசு என
யார் யாரையோ வர்ணிப்பவர்
தன் ஆணவத்தை
ஆழஅளந்து பார்க்கட்டும்!

ஆழியில் மிதந்த வண்ணம்
நதியில் குளிப்பவரை
இகழ்கிறுர்
தொடக்கத்தில்
தான் தவழ்ந்த
தேசத்தை
மறந்திட்டார்!

மேகங்கள் யாவும்
மழையாகி விடுவதில்லை
அவற்றில்
சில தாயினும்
பொழியாமல் விழுவதில்லை!

தோழர்களே...தோழர்களே...
சோகத்திலா மிதக்கிறீர்?
சின்ன முள்ளு
உங்கள் சிந்தைகளை
சிதைத்தா விட்டது?

எழுதுங்கள்... எழுதுங்கள்...
பாதிப் பேராயினும்
பாரதியாக மாட்டீரா?

20- 7- 86 ஆனந்த விகடனில் கவிஞர் மு. மேத்தாவின் இன்றைய இளைய புதுக் கவிதையாளர்களை சாடுவது போல் யாக்கப்பட்ட 'சற்றே இரு பிள்ளாய்' என்ற கவிதையின் தன்மையை மறுத்து எழுதப் பட்ட கவிதை.

# கையில் கிடப்பது பூ!

நான்
விழித்திருக்கும் போதே
நீ ஏன்
கனுக் காண வைக்கிருய்?

உடைக்காதே
என் இருதயத்தை
உடைக்காதே!
திறந்து தானே
அதை
வைத்திருக்கிறேன் ..
முடியுமென்ருல்
என் ரத்தத்தை
உறிஞ்சி யெடு!

இதோ!
நான்
விழுந்து கிடக்கிறேன்...
இந்நேரம்
உனக் கென்ன
நாட்டியம் .. !

ஆடாதே!
என் அன்பே
ஆடாதே ..
நான்
அதிர்ந்து போவேன்!

வாழ்க்கைப்
புத்தகத்தின்
இளமை அத்தியாயத்தை
வாசித்துக் கொண்டிருக்கிறேன்!
நீ
எழுத்துக்களிலிருந்து
இறங்கி விடாதே!
நான்
வறண்டு விடுவேன்!
அடி பெண்ணே...
என்
கண்ணீர்த் துளிகளைப் போல்
என்
கனவுகளும்
கனமானவை தாம்!
நீ
கவலைப் படாதே!

உன்
விருப்பமில்லாமலேயே
என்னுல்
உன்னை
விரும்ப முடியும்—
காரணம்—
என் கையில் கிடப்பது
கத்தியல்ல;
பூ... ....;

வவுனியா- இலியன்

# என் ஊரில் நானே அந்நியன்!

காலைப் பொழுது.
பூபாளமாய்
குயில் கூவியது
சங்கீத ஈரத்தில்
ஊர் ஞாபகம் முளைத்தது ...

போய் விட்டேன்
என்னை
என்னிலேயே தேடினேன்!

மேகங்கள்
சோகங்களோடு
மெல்ல மெல்ல அலைகின்றன...
பாதிப்பேர்
கனவுகளோடு நடக்கிறார்கள்.

மீதிப்பேர்
கண்ணீரோடு
செத்தே போனார்கள்!

என் ஊரில்
நானே அந்நியன்—
என்
நிழலுக்கும் அபாயம்!

பழுத்த இலைதானே
விழும்
இல்லை—
அங்கே தளிர்களும்
மண்ணில் தான்!

வானமும் பழையது
மேகமும் பழையது
காற்றும் பழையது
சூரியனும் பழையது
துன்பங்கள் மட்டுமே
புதியன......!

பதைகள் இல்லை.
பயணிகள் இல்லை
பஸ் நிலையம் மட்டும்
விஸ்தரிக்கப்பட்டு விட்டதாம்!

மக்களின்
கண்ணீராய்ப் போனதனால்
குளங்களிலும்
நீர் இல்லை
இதயங்களில்
ரத்தமில்லை......!

தாயகத்திலேயே
தாயைத்
தரிசிக்க முடியாத
தவிப்பு... ...

நான்
நடந்த
பாதைகளில்
நரிகளின் ஊளை...
வீட்டில் கேட்டார்கள்
' நீ ஏன் வந்தாய்?'

வெள்ளமாக
கொந்தளித்த
விழிநீரை
மௌனமாகத்
துடைத்துக் கொண்டேன்!

பஸ் ஏற நின்றேன்.
என் நண்பன்
பிடிக்கப்பட்டானும்

சந்தோஷத்தை
சந்திக்கப் போய்
சோகத்தை
சுமந்து வந்தேன்.

மூடப்பட்டு இருப்பதால் தானே
முத்து
நத்தையாகத் தெரிகிறது!
நத்தையில்தான்
முத்தே
விளைகிறது!

## சோகம்

நான் காணமல் போய்விட்டேன்.
கண்டு பிடியுங்கள்
கண்ணீருக்குள்!

# ஈழத்து இளைஞனே...

அவன்
முட்டைக்குள் தான்
இருந்தான்
உள்ளே
உஷ்ணம் தாங்கமுடியாமல்
கருக்கட்டி
வெளிவந்தான்,
அந்தப் பிஞ்சுத் தளிரை
பட்ட கிளைகள்
சுட்டுப் பார்க்கின்றன!

இமயமாக
வளரப் போகிற
அந்தக் கட்டடம்
அஸ்திவாரத்திலேயே
உடைத்தெறியப் படுகிறது!

அதோ-
அந்தக் காக்கைகளை
இனம் பிரிக்கும் போது
குயில்களின்
கூவல்களுமல்லவா கேட்கிறது!

அவன்
வாழ்ந்த வசந்தங்களை
கிழித்துப் பார்த்தால்
கோடைகளின்
புலம்பல்களைத் தான் கேட்க
முடியும்!

அந்த
எச்சிலை
மேகத்தான் துப்பியது
அது
சுங்கையில் விழ வேண்டியது
சாக்கடையில் விழுந்து விட்டது!

அந்த
சின்னத் தீயால்
ஒரு வனத்தையே
ஜீரணித்து விட முடியும்
ஆனால்-
அது
சிகரெட்டை
பற்ற வைப்பதோடு
நின்று விடுகிறது!

ஈழத்து இளைஞனே
கருப்பையிலிருந்து
விழுந்த
வலி தாங்கமுடியாமலா
நீ
மரணமாகிக் கொண்டிக்கிறாய்?

நீ
இறந்தகாலத்தில்
கிடந்தது
நரகத்துள்
இனி-
துணிவொன்றை
சுமந்து நட
சொர்க்கம் தெரியும்!

நீ
முஹாரியில்
மூழ்கிக் கொண்டிருந்தால்
மோகனம்
உன்னை
புறக்கணித்து விடும்!

நீ
வீணையாக
மீட்டப்பட வேண்டியவன்
விறகுக் கட்டையாக
வெந்து போகாதே!
வாழ்க்கை
உன்னைச்
சுமக்காது,

நீ தான்
வாழ்க்கையைச்
சுமக்க வேண்டும்!
நட!
நாளை
புதியவிடியலைக்
காண்பாய்!

வவுனியா- இலியன்

# இந்த வானம் நிலவைத் தேடுகிறது

இதோ—
ஈழத்தின்
இளைய இதயமொன்று
இளைத்துக் கிடக்கிறது!

சும்மா சொல்லக் கூடாது...
இது ஓர்
உயிருள்ள சடலம்!

பாருங்கள் தோழர்களே...
பாருங்கள்...!
இவன்
ஒரு கையில் போத்தலையும்
மறு கையில் காதலையும்
சுமந்து கிடக்கிறான்!

அழுக்குப் படிந்த
இப் பூமிப் பந்தினைப்
புரட்டக் கூடிய வலிமை
இவன் மனசுக்குண்டு;
ஆனால்— அது
காதலுக்கே
அதிகம் செலவழிக்கப்படுகிறது!

பகலாய்
விரிந்திருந்த
இந்த வெள்ளை வானத்தில்
இருட்டு
மொய்த்து விட்டது!

❋

தனிமையில்
தவித்து
தன்னுள் ஒரு
நிலவைத் தேடுகிறது!
இது தனியொரு
மனிதனின் காயமல்ல;
சமுதாயத்தின் காயம்!

இக்காயத்திற்கு
யார் வந்து
மருந்து பூசப் போகிறார்கள்?


---

24 - 1 - 89 அன்று வவுனியா பிரதேசத்தில் மருக்காரம்பளை என்னும் கிராமத்தில் மேடையேற்றப்பட்ட 'நிலவைத் தேடும் வானம்' என்ற நாடகத்தில் இந்தக் கவிதை பயன்படுத்தப்பட்டுள்ளது.

---

எமது
இளைஞர்கள்
பெண்ணோடுசேர்ந்து
மண்ணையும் காதலிக்க
எப்போது
கற்றுக்கொள்ளப் போகிறார்கள்?
பதில் சொல்ல வேண்டியது
நீங்களே...!

❋



# சூரியன் ஒன்று செய்வோம்!

★ எங்கள்
மரத்தின் உயிருக்கு
வேர்கள் தான்
பகை
ஆம்
அவை
புழுக்களோடல்லவா
புணர்ந்து கொள்கின்றன!

★ ஆடையில் பிடித்துக் கொண்ட
தீ
உடலில் பற்றுவதற்கு முன்பே
எழுந்து விட்டோம்.
ஆனாலும்
சிலர்
தூங்கிக் கொண்டே இருக்கி றார்கள்!

★ இனி
இமைகள்
விழிகளில் இறங்க வேண் டாம்..
ஏன்
இமைகளே
எமக்கு வேண்டாம்!

★ மலையின் உச்சியில்
கொடி பிடிக்க வேண்டிய
நாம்
பாதங்களின் கீழ் அல்லவா
நசிபட்டுக் கொண்டிருந் தோம்!

★ நாம்
பறப்போம் என
தீர்மானித்து விட்டால்
மேகங்களே
எமக்கு
சிறகுகளாகி விடும்!

★ புதைந்து போன
சுதந்திர விளக்கினை
கும்பிட்டெடுக்கக் கூடாது.
தோண்டி எடுக்க வேண்டும்


★ தேசத்தை
தின்னக் கொடுத்த
பழைய
முகங்கள்
இப்போதும்
நாற்காலிகளைப் பற்றியே
கனவு காணுகின்றன!

★ தினமும்
சூரியன் கிழக்கில் உதிக்கிற
போதும்
நாம்
இருட்டில்தான்
இருக்கிறோம்!
இனி-
சூரியன் வேறொரு
புதிய திசையில் உதிக்கட்டும்
உதியாது போனால்
நாம்
ஒரு புதிய சூரியனைச் செய்து
அதைப்
புதிய திசையில்
உதிக்க வைப்போம்!

© ● ○

## போராளி

இமைகள்
திறந்திருக்கும்
வயிறு
பசித்திருக்கும்
கால்கள்
பழுத்திருக்கும்
ஆனாலும்
தேசம்
அவன் சிந்தனையில்
மொய்த்திருக்கும்!



# மீண்டும் மீண்டும் உன் ஞாபகங்கள்......

நீ
என் எதிரே
நடந்து வரும் போதெல்லாம்
உன்
பாதங்களின் ஓசை
என்
இதயத்திலிருந்து
எழுகிறது!

நீ
உன் விழிகளெனும்
இரு பூக்களினால்
என்
முகத்தை
முத்தமிடும் போதெல்லாம்
என்
நெஞ்சுக்குள்
தேன் மழை
பொழிகிறது!

நான்
தவழ முடியாமல்
தவித்துக் கொண்டிருந்தேன்
சிறகு தந்து
பறக்க வைத்துவிட்டு
நீ ஏன்
சிதைந்து போனாய்?
மொட்டாக
முனகிக் கொண்டிருந்தேன்
என்னை
மலர வைத்து விட்டு
நீ ஏன்
மௌனமானாய்?
அன்பே!
நான்
உன்
இதயக் கதவைத்
'திறந்து விடு'
என்று கேட்பது
உன்
மௌனத்தின் அர்த்தத்தை
அறியவே...

மீண்டும் மீண்டும்
உன்
ஞாபகங்கள்
என்
மனசை
கிள்ளுகின்றன!

சில சமயம்
நீ
என்னை
நிராகரித்து விடலாம்;
ஆனால்—
உன்
நினைவுகள்
என்னை என்றும்
ஆதரிக்கும்.
அன்பே
அவை
ஆதரிக்கும்!

★ ● ★

★

## மௌனம்

உலகத்திலேயே
உன்னதமான
பாஷை . .

★

## விபசாரம்

எய்தவன்
இளிக்கிறான்......
அம்பு
அழுகிறது!

வவுனியா- திலீபன்

# கறுப்பு இனத்தின் வெளிச்ச விளக்கு!



நெல்சன் மண்டேலா!
நான்
பிறப்பதற்கு முன்பே
சிறைப்படுத்தப் பட்டவனே!

தேசத்தின்
விடுதலைக்குப் பின்பே
தேகத்தின்
விடுதலை வேண்டுமென்கிற
நெருப்பின்
பிரஜையே...

வெள்ளை மிருகங்களை
விரட்டியடிக்க
விழித்தெழுந்தவனே...!
உனக்கு
என்
ஈழத்து வாழ்த்து...

மண்டேலா!
மாமனிதனே...
நெருப்பை
பஞ்சு மூடைக்குள்
பதுக்கி வைக்க
முடியுமா?

வானத்தில் தொங்கும்
சூரியனை
கல்லெறிந்து வீழ்த்த முடியுமா?

சிறை
உன்னை என்ன செய்யும்?
உன்
உணர்வுகள்
சுதந்திரமாகச்
சுற்றித் திரியும்போது
சிறை
உன்னை என்ன செய்யும்?

# அன்றுதான், இது நடந்தது

அன்றுதான்
இது நடந்தது.

நடந்தது
நல்லது தான்...
ஆனல்—
'எமக்கு
கூடாதது என ஆகி விடுமே'
எண்ணினேம்.

அன்றுதான்
இது நடந்தது.

என்
எழுத்துக்களை
புத்தக
வயலில்
பயிரிட வேண்டுமென
உதவிகோரி—
பலரைச்
சந்திக்கச்
சென்றிருந்தோம்.
அன்று தான்—
இது நடந்தது.

தீபனும்
சிவாஜியும்
என்னேடு
வந்திருந்தனர்.

மோட்டார் சைக்கிளில்
மூன்று பேரும்
முட்டியிருந்து
பயணித்தோம்.

இருள்
கவியும் நேரம்
திரும்பினேம்
நடந்து விட்டது.
பட...பட......
தட... தட......
அன்று தான்
இது நடந்தது.
நாம் என்ன
மிருகங்களா?
இது
கட்டாயம் தேவை!

★ இருபத்தி நான்கு வயது இளவல் இவன். வவுனியா மகாவித்தியாலய பழைய மாணவன். புதுக் கவிதைப் பிரியன்.


★ வன்னியின் இக்கவிமலர் கடந்த நான்கு வருடங்களாக கருத்து மணம் வீசு கின்றது.

★ முற்போக்கு என்று வெறும் முன்னறிவிப்பு மட்[illegible] செய் யாமல் அதனைக் கருத்தாகக் கொண்டவன்.

★ காத்திரமும் காலமும் கலந்து கட்சிதமாய் தரும் இவன் கவி களில் தேசத்தின் அன்பும் தெரியும், அவலமும் எட்டிப் பார்க்கும்.

★ பத்திரிகைத்துறை அனுபவ மும், பல்கலை ஈடுபாடும் பல மாய் இவனுக்கு உண்டு.

★ கவிஞனின் முதல் அறுவடை இது. வேகம்மிக்க கவிதை களும் வேட்கையுள்ள கவி தைகளும் உண்டு.



★ வவுனியா - இலீபன் என்னும் வன்னி மைந்தன் வலிமை சேர்ப்பான் தன் மண்ணுக்கு; வளம் சேர்ப்பான் தமிழுக்கு என்ற நம்பிக்கை உண்டு.

இணுவையூர்,
- சிதம்பர திருச்செந்திநாதன் -


வெளியீடு
வன்னி இலக்கிய கலாமன்றம்
வவுனியா.